# கொழும்புப் பல்கலைக்கழகம்

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு II - 2017

## ஒப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் <u>நான்கு (04)</u> வினாக்களுக்கு <u>மட்டும்</u> விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. "... 'மனச்சாட்சி' என்பதன் அடிப்படையிலேயே சான்சலர் இந்த அரச அதிகாரத்தை அநீதிக்குப் பரிகாரம் வழங்க, அவர்களுடைய சட்ட உரிமைகள் எவ்வாறு இருந்த போதிலும் சிறந்த மனச்சாட்சிக்கமைய செயற்பட தனிப்பட்டவர்களுக்குக் கட்டளையிடுவதன் மூலம் பயன்படுத்தினார்."

   ஆங்கிலச் சட்டத்தில் ஒப்புரவின் சரித்திர ரீதியான வளர்ச்சி மற்றும் ஒப்புரவு முதுரைகள் என்பவைகளின் பின்னணியில் மேலுள்ள கூற்று மீது நுணுக்கமாகப் பிரதிபலிக்க.

2. பின்வரும் சூழ்நிலைகளில், ஒப்புரவில், குறித்த நிறைவேற்றம் வழங்கப்பட முடியுமா என ஆலோசனை வழங்குக:

   (அ) ஜென்கின்ஸ் என்ற ஐக்கிய நாடுகள் தாபன அதிகாரியொருவர் சுராத்தினுடைய மாடிக்குடியிருப்பு தொகுதியில் மாடிக்குடியிருப்பு ஒன்றுக்கான ஐந்து வருட குத்தகையொன்றைக் கொண்டிருந்தார். அந்த குத்தகைக்கமைய சுராத் 'பொதுவான பகுதிகளை துப்புரவாக்குதல், குளிரூட்டிகளைப் பராமரிப்பது மற்றும் குப்பை தொட்டிகளுக்கு குப்பைகளை எடுத்துச் செல்வது போன்ற கடமைகளைக் கொண்டிருந்த தங்கியிருக்கும் சுமைதூக்கியொருவனை ஊழியத்திலமர்த்த வேண்டியிருந்தது.' சுராத் சுமைதூக்கியொருவனை வழங்க தவறியிருந்தான். ஜென்கின்ஸ் இற்கு ஆலோசனை வழங்குக.

   (ஆ) ஜெரால்ட் என்ற சிரேஷ்ட பொறியியலாளனொருவன் சோலர் என்ஜினியரிங் கம்பனி என்பதுடன் அதனுடைய முகாமைத்துவப் பணிப்பாளனாக ஐந்து வருட காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கான ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டான். அவன் தனது கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்ற போது சோலர் என்ஜினியரிங் கம்பனியின் தவிசாளர் அக் கம்பனியானது முகாமைத்துவப் பணிப்பாளனொருவர் இல்லாது செயற்பட தீர்மானித்துள்ளதாக அவனுக்குத் தெரிவித்தார். ஜெரால்ட் இற்கு ஆலோசனை வழங்குக.

தாமதத்தை ஏற்படுத்தியது. அந்த விற்பனை நடபடியான இறுதிக்கட்ட, ஹெரனத்திற்கு உயிராபத்தான நோயிருப்பது கண்டறியப்பட்டதுடன் அவனுடைய காலொன்று சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. அவன் நெருங்கிய நண்பர்களிலும் உறவினர்களிலும் உதவிக்குத் தங்கியிருந்தான் என்பதுடன் வீட்டை விட்டு விலகிச் செல்ல தற்போது விரும்பவில்லை. ரமிலுக்கு ஆலோசனை வழங்குக.

(ஈ) யம்மு இதிரியட்ட கட்சியின் செயலாளரான கொலின் என்பவன் அக் கட்சியின் வருடாந்த மாநாட்டை நடாத்துவதற்காக இரண்டு நாட்களிற்கு அதனது மாநாட்டு மண்டபத்தைப் பயன்படுத்த துன்முல்ல நகர சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டான். சமாதான குலைவு மற்றும் கலவரம் என்பவைகளுக்கு அஞ்சி, அச் சபையானது அந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தியது. கொலின் இற்கு ஆலோசனை வழங்குக.

3. சுரேனின் இறுதி விருப்பாவணத்தில் செய்யப்பட்டுள்ள பின்வரும் வேண்டுதல்கள் வலிதான வெளிப்படையான நம்பிக்கைகளை ஆக்குகின்றனவா என நம்பிக்கையாளனான அர்ஜுன் இற்கு ஆலோசனை வழங்குக:

(அ) எனது பாடசாலை கிறிக்கெற் பயிற்றுனரின் பிள்ளைகளின் கல்விக்காக அப் பணம் பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் (belief) மக்கள் வங்கியின் திம்பிரிஹஸ்யாய கிளையிலுள்ள எனது நிரந்தர வைப்பின் (fixed deposit) 50% ;

(ஆ) பீடத்தின் எல்லா பீடாதிபதிகளதும் பெரியளவிலான படங்களை ஆக்கி அவைகளை உயர்தர தங்கநிற சுற்றுப்பலகைகளால் (frames) சுற்றுப்பலகையிட்டு பீடத்தின் சபை அறையில் வைப்பதற்காக சட்ட பீடத்திற்கு ரூபா 300,000/= ;

(இ) எனது பிள்ளைகளதும் அவர்களுடைய சந்ததியினரதும் நன்மைக்காக தெகிவளையிலுள்ள இருபது வீடுகளுடனான எனது மாடிக்குடியிருப்பு தொகுதி ;

(ஈ) நுவரெலியாவிலுள்ள எனது மதுபான கடையின் வியாபாரத்தை முன்னேற்றுவதற்கும் அவ் வியாபாரத்திலிருந்தான இலாபத்தை அவனது தற்துணிபில் அர்ஜுன் இனால் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 எச்ஐவி (HIV) உள்ள ஆட்களின் நன்மைக்காகப் பயன்படுத்தவுமென ரூபா 3 மில்லியன்.

4. "தர்ம நம்பிக்கைகள் தொடர்பான பெரும்பாலான வழக்குகளில் வினவப்படும் கொள்கையானது தர்ம நம்பிக்கைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளைப் பெறுவதற்கு நோக்கங்களானவை பொதுமக்களுக்குப் பயனுள்ளவைகளாக உள்ளனவா என்பதனைப் பரீட்சிப்பதாகும். ஆயினும் இக் கொள்கையானது மாறிவரும் சமூக மற்றும் பொருளாதார நிபந்தனைகளுக்கு உள்ளானதாக அவசியமாக இருத்தல் வேண்டும்."

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணமளிக்கப்பட்ட ஆதாரப்படுத்தப்பட்ட வாதங்களை வழங்குக.

5. (அ) நல்லூரில் பிறந்து பின்னர் அங்கே வேலை செய்துள்ள சிவா என்பவன் கடந்த இருபது வருடங்களாக கனடாவில் வசித்துள்ளான். 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர், சிவா ஆதன விற்பனையாளனான பிரேம் என்பவனுக்கு ரூபா 7 மில்லியனை அனுப்பியதுடன், நல்லூரிலுள்ள வீட்டுடனான காணியொன்றை சிவாவினுடைய சகோதரியான கமலா என்பவளின் பெயரில் மாற்றுமாறு அவனை வேண்டினான். அந்த வீட்டைக் கொள்வனவு செய்த பின்னர் நல்லூரிலுள்ள அந்த வீட்டில் கமலா வசித்தாள். சிவா கோப்பாயிலுள்ள தனது பழைய வீட்டிலுள்ள எல்லா பெறுமதியான புராதன தளபாடங்களுக்கும் வார்ணிஷ் (varnish) செய்து நல்லூரிலுள்ள அந்த வீட்டில் அவைகளை வைக்குமாறு கமலாவை வேண்டினான். கமலாவிற்கு சிவா அனுப்பிய பல மின்னஞ்சல்களில், கனடா வாழ்க்கை முறையையும் காலநிலையையும் தான் விரும்பவில்லை என அவன் குறிப்பிட்டிருந்தான். 2017 ஏப்ரலில் சிவா இலங்கைக்குத் திரும்பியதுடன் நல்லூரிலுள்ள வீட்டை தனக்கு மீள்-மாற்றஞ் செய்யுமாறும் தனது தளபாடங்களை திருப்பி தருமாறும் கமலாவைக் கேட்டான். அந்த வீட்டை மீள் - மாற்றம் செய்யவும் அந்த தளபாடங்களை திருப்பி வழங்கவும் கமலா மறுத்தாள். அவைகள் தன்னுடைய ஆதனங்கள் எனவும் அவைகள் மீது சிவாவிற்கு எந்த உரிமைக் கோரிக்கையும் இல்லை எனவும் அவள் தெரிவித்தாள்.

சிவா உமது ஆலோசனையைக் கோருகின்றான். நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) கண்டியிலுள்ள வழக்கறிஞரொருவனான மஹேறன் என்பவன் நாவலப்பிட்டியில் வசிக்கின்ற விதவையான தனது ஒரே சகோதரியான ஓவியா என்பவளிடமிருந்து கண்டியிலுள்ள பெறுமதியான காணியொன்றை வீடொன்றுடன் கொள்வனவு செய்தான். அக் கொள்வனவிற்கு முன்னர், உள்ளூர் மக்கள் அக் காணியை ஆக்கிரமிப்பு செய்கின்றார்கள் எனவும் மீன் சந்தையொன்றுக்காக அக் காணியைக் கையேற்க மாநகர சபை கருதுகின்றதெனவும் மஹேறன் ஓவியாவிற்குக் கூறினான். அந்த காணியும் வீடும் கொள்வனவு செய்யப்பட்ட போது அந்த வீட்டின் மோட்டார்கார் தரிப்பிடத்தில் தொல்பொருள் பெறுமதியுள்ள இரண்டு மோட்டார்கார்கள் இருந்தன. ஒரு மோட்டார்கார் ஓவியாவினுடைய இறந்த கணவனுக்குச் சொந்தமானதாகவும் மற்றையது ஓவியாவின் கணவனுடன் மோட்டார்கார் வியாபாரமொன்றை நடாத்திய அவனது வியாபார பங்காளியான நாமல் என்பவனுக்குச் சொந்தமானதாவும் இருந்தது. அவளது கணவனது மோட்டார்காரானது வீதியில் செல்லும் நிலையில் இல்லை என மஹேறன் ஓவியாவிடம் கூறி அந்த மோட்டார்காரைக் கொள்வனவு செய்தான். பின்னர் மஹேறன் தன்னை ஏமாற்றி விட்டான் எனவும் காணி, வீடு மற்றும் மோட்டார்காரினது குறைவாக மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு அவளை உடன்பட வைத்துவிட்டான் எனவும் ஓவியா அறிய வந்தாள். நாமல் அந்த மோட்டார்காரை எடுக்க வந்தபோது கைவிடப்பட்ட மோட்டார்காரை தற்போது

ஓவியாவும் நாமலும் உமது ஆலோசனையைக் கோருகின்றனர். நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

6. 'நம்பிக்கையாளரின் பதவிக்கு அடிப்படையாக அமைந்த பொறுப்புள்ள கோட்பாடானது 'எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது' என்பதாகும் ; எல்லாவற்றையும் விட அவருடைய உரிமைகள் என்று சொல்லப்படுவதற்கு குறைந்தளவானவையே உள்ளன.'

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் மற்றும் ஏதேனும் பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தையும் பயன்படுத்தி மேலுள்ள கூற்றை தெளிவுபடுத்துக.

7. (அ) 2013 இல், நிஹால் என்பவன் பண்டாரவளையிலுள்ள மல்வத்தை மற்றும் புத்தளத்திலுள்ள பொல்வத்தை என அழைக்கப்படும் இரு ஆதனங்களை நிஹாலின் மகனான வருணா என்பவனின் நன்மைக்காக நம்பிக்கையில் மஹேஷிற்கு மாற்றினான். மல்வத்தையை நான்கு காணித்துண்டுகளாக பிரித்து அவைகளை இரண்டு வருடங்களினுள் விற்று பெறுபவைகளை வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடுமாறு மஹேஷை நிஹால் கேட்டான். 2017 இல், உமா ஓயா திட்டத்திற்கு எதிரான எதிர்ப்புகளின் காரணமாக அப் பிரதேசத்தில் காணிபெறுமதிகள் குறைந்தன என்பதுடன் அதனை காணித்துண்டுகளாகப் பிரிக்காது முழுக்காணியையும் மஹேஷ் விற்றான். நிஹாலினால் அறிவுறுத்தப்பட்டவாறாக வங்கிக் கணக்கொன்றில் பெற்றவைகளை மஹேஷ் வைப்பிலிட்டான். வருணாவின் கல்விக்காக பொல்வத்தையிலிருந்தான வருமானத்தைப் பயன்படுத்துமாறு நிஹால் மஹேஷை வேண்டினான். ஆனால் மஹேஷ் பொல்வத்தையை விமால் என்பவனுக்கு விற்றதுடன் விமால் அந்த காணியை நம்பிக்கை பற்றிய எந்த அறிவும் இன்றி கொள்வனவு செய்தான். விமால் அக் காணியை கமாலுக்கு விற்றான். அந்த விற்பனையிலிருந்து கிடைத்தவைகளிலிருந்து மாடிக்குடியிருப்பு ஒன்றை மஹேஷ் கொள்வனவு செய்தான்.

நம்பிக்கை முறிவுகளின் தன்மை பற்றியும் அவனுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள நிவாரணங்கள் பற்றியும் உமது ஆலோசனையை வருணா கோருகின்றான். நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் வருணாவிற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) பின்வரும் சூழ்நிலைகளில் 7 (அ) விலுள்ளவைகளைக் கருதுக: அதனைக் காணித்துண்டுகளாக பிரிக்காது மல்வத்தையை தான் விற்பதாக மஹேஷ் வருணாவிற்கு அறிவித்திருந்தான் ; விமாலுக்கு மஹேஷ் செய்த பொல்வத்தையின் விற்பனையை வருணா ஏற்றங்கீகரித்ததுடன் விமாலினால் செலுத்தப்பட்ட கொள்வனவுப் பணத்தின் பகுதியை ஏற்றுமிருந்தான் ; மற்றும் கமாலுக்கு நம்பிக்கை பற்றிய அறிவு இருந்தது.